සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND

දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின்எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
Department of Divineguma Development

1වන අධියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල.
1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல
1st 4th floor, Sethsiripaya ,Battaramulla

මගේ අංකය / எனது இல / My No: DDD/HO/MF/05/02/
ඔබේ අංකය / உமது இல / Your No: ..............
දිනය / திகதி / Date: 2016.12.15

**வாழ்வின் எழுச்சி வங்கி சுற்று நிருப இலக்கம் :- 2016/10**

சகல வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கட்கும்,

**<u>வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளின் ஊடாக வழங்கப்பட்டு தற்போது அறவிட முடியாக் கடன் வகுதிக்கு மாற்றப்பட்டுள்ள கடன்களை மீள் அறவீடு செய்வதற்கு வட்டிச் சலுகை வழங்கல்</u>**

**01. அறிமுகம் :-**

1996 இல் இருந்து இன்று வரை வங்கிகளினால் வழங்கப்படட்ட கடன்களில் கடனாளிகளால் வேண்டுமென்று மீளச் செலுத்தாமல் தற்போது அறவிட முடியாக் கடனாக மாறியுள்ள கடன் தொகையினை விரைவாக அறவீடு செய்து கொள்ள வேண்டியுள்ளது. அதற்காக கடனாளிக்கு கடன் சலுகையினை வழங்குமாறு வங்கிகளினாலும், கடனாளிகளினாலும் பல கோரிக்கைகள் எம்மிடம் விடுக்கப்பட்டிருந்தன.
இச் சலுகையினை வழங்கும் போது கீழ்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

I. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் செயற்படாத கடன் வகுதிக்கு மாற்றியுள்ள கடன்களை (அறவிடமுடியாக் கடன்களை) செயற்பாடுள்ள கடன்களாக மாற்றுதல்.

II. இக் கடன் தொகைக்கு பிணையாக நின்று தற்போது அது அறவிடமுடியாக் கடனாக மாறியுள்ள காரணத்தினால் அக் குழுவின் ஏனைய தரப்பினர்கள் கடன் பெறமுடியாத நிலையில் உள்ளனர். இன் நிலையில் இருந்து அக் குழுவின் அங்கத்தவர்களை விடுவித்துக் கொள்ளல்.

III. கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் கடன் தொகையினை மீளச் செலுத்தாமல் இருந்து தற்போது ஏதும் சலுகைகளின் அடிப்படையில் கடன் தொகையினை மீளச் செலுத்த முன் வருகின்ற அங்கத்தவர்களுக்கு கடனை செலுத்துவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல்

IV. வங்கிகள் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்து அறவிட முடியாக் கடனை அறவீடு செய்வதற்கு முயற்சிக்கும் போது அதிக செலவீனங்களும், நீண்டகால விரயமும் ஏற்படுகின்றது. இன் நிலைமையினை சீர் செய்வதும் அக் கடனாளிகளை கஸ்டத்தில் இருந்து விடுவித்துக் கொள்ளலும் ஆகும்.

**02. அறவிட முடியாக் கடனை அறவீடு செய்வதற்கு வழங்கப்படும் சலுகைகள்**

2.1 தற்போது அறவிட முடியாக் கடன் வகுதிக்கு மாற்றப்பட்டுள்ள கடன்களில் ஒப்பந்தம் செய்யப்பட்ட வருடாந்த வட்டி வீதம் **10%** தினை விட கூடிய வட்டி வீதத்துக்கு பெற்றுக் கொண்ட கடன்களே இத் திட்டத்தின் கீழ் சலுகையினை பெறுவதற்கு தகுதியுடையனவாகும்.

2.2 இவ்வாறான அறவிட முடியாக் கடனாளி கடன் தொகையினை மீளச் செலுத்தும் போது **10%** வருடாந்த வட்டி வீதத்துக்கு வட்டியினை கணிப்பீடு செய்து அவ்வட்டியுடன் கடன் தொகையினை மீளச் செலுத்த முடியும். (வீட்டுக் கடனும் இதனுள் அடங்கும்.)

2.3 போலியான அல்லது ஊழியர் மோசடியுடன் தொடர்புபட்ட கடன்களுக்கு இச் சலுகைகள் எந்த விதத்திலும் வழங்கப்படல் ஆகாது.

**03. வட்டிச் சலுகை வழங்கப்படுகின்ற அறவிடமுடியாக் கடன்களின் ஆயுட்காலம்**

3.1 2016 நவம்பர் மாதம் 10 **ஆம்** திகதியன்று **5** வருடங்கள் அல்லது அதனை விட கூடிய ஆயுட்காலத்தையுடைய அறவிடமுடியாக் கடன்களுக்கு பந்தி இலக்கம் **02.0** இன்படி சலுகைகள் வழங்க முடியும்.

3.2 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளின் கவனக்குறைவு, மற்றும் தவறுகள் காரணமாக அறவிட முடியாக் கடன் வகுதிக்கு மாற்றுவதற்கு தாமதமாகியுள்ள சந்தர்ப்பங்களில் கடன் தொகை தவணை தவறிய தினத்தில் இருந்து **2016.11.10** ஆம் திகதி வரை **05** வருடங்கள் அல்லது அதற்கு கூடிய காலங்களைக் கொண்ட அறவிட முடியாக் கடன்களுக்கு **10%** வட்டிக் கணிப்பீட்டை மேற்கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

**04. தற்போதைய வட்டி வீதத்திற்கு எற்ப சீர்செய்வதற்கு இடமளிக்கப்படும் காலம்**

4.1 **2016.12.15** ஆம் திகதியில் இருந்து கூடியது 18 மாதங்களுக்குள் அனைத்து அறவிட முடியாக் கடன்களையும் மீள் அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 அறவிடமுடியாக் கடன் தொகைக்கேற்ப கீழ்வரும் காலத்துக்குள் மீளச் செலுத்துவதற்கு இடமளித்தல் வேண்டும்.

| அறவிட வேண்டிய கடன் தொகையின் பெறுமதி (ரூபா) | மீளச் செலுத்துவதற்கு இடமளிக்கப்படும் காலம் (மாதம்) |
|---|---|
| ரூபா 5,000/= அல்லது அதைவிட குறைவு | 06 |
| ரூபா 5,001/= இருந்து 10,000/= வரை | 12 |
| ரூபா 10,001/= வுக்கு மேல் | 18 |

4.3 கடனாளியின் கோரிக்கைக்கு அமைய உயர்ந்தபட்ச கால எல்லையினை குறைத்து மீளச் செலுத்துவதற்கு இடமளிக்க முடியும்.

**05. தற்போதைய வருடாந்த வட்டி வீதத்துக்கு அமைய வட்டி கணித்தலும் மீளச் செலுத்தலும்.**

5.1 தற்போதைய அறவிட முடியாக் கடன் அறவீட்டு முறைக்கு அமைய தவணை மற்றும் வட்டித் தொகை அறவீடு, கணக்கு வைத்தல் என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5.2 இங்கு முதலில் வட்டித் தொகையினையும் அதன் பின்னர் கடன் தவணையையும் அறவீடு செய்யும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையில் எவ்வித மாற்றமும் இல்லை.

5.3 இவ் அறவிட முடியாக் கடனுக்கான மாதாந்த தவணைகள் பந்தி இலக்கம் **4.02** இன் பிரகாரம் ஒருவருக்கு வழங்கப்படும் கடனை மீளச் செலுத்துவதற்கான காலத்துக்கு அமைய அறவிட வேண்டிய கடன் தொகையினை வழங்கப்படும் சலுகை காலத்தால் பிரித்து தவணைத் தொகையினை தீர்மாணித்துக் கொள்ள வேண்டும்.

5.4 இம் முறையினை பின்பற்றி கடன் தொகையினை மீளச் செலுத்தும் போது ஒப்பந்தம் செய்த காலம், தவணைக் கட்டணம் என்பன வேறுபடுவதால் புதிதாக காலம், தவணைத் தொகை என்பவற்றை பயன்பாட்டில் கொள்ள வேண்டும்.

5.5 தற்போது செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்யாமல் அதனையே பாவித்துக் கொள்ளல் வேண்டும். புதிய மாற்றங்களை தனிநபர் பேரேடு, கடன் அட்டை மற்றும் பாஸ்புத்தகம் என்பவற்றில் மாத்திரம் குறிப்பிட்டு செயற்படுத்திச் செல்லல் வேண்டும்.

5.6 கடன் தொகையினை மீளச்செலுத்துவதற்கு வழங்கப்படும் இப்புதிய முறையானது எந்தவிதத்திலும் கடன் மீள்ஆவணப்படுத்தல் முறைக்கு உட்படுத்தலாகாது என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**06. வட்டிச் சலுகையினை வழங்குவதற்கு வங்கி மட்டத்தில் விசாரணை குழு அமைத்தல்**

6.1. குழுவின் அமைப்பு

I. முகாமையாளர் - வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் (தலைவர்)
II. தலைமையக முகாமையாளர் - அங்கத்தவர்
III. வங்கி முகாமையாளர் - செயலாளர்
IV. வலய உதவியாளர் - அங்கத்தவர்
V. கட்டுப்பாட்டு சபை தலைவர் - அங்கத்தவர்

6.2 வருடாந்தம் **10%** வட்டிச் சலுகை வழங்குவதற்கான அறவிட முடியாக் கடனாளிகளை அடையாளம் காணுதல் கட்டாயமாக இக் குழுவின் மூலமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இங்கு ஒவ்வொரு கடனாளியையும் விசாரணைக் குழு தனிப்பட்ட முறையில் அழைத்து அணுகுவதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

I. விடுவிக்கப்பட்ட கடன் தொகையும் தற்போது செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையின் பெறுமதியும் (ரூபா)
II. கடன் தொகை விடுவிக்கப்பட்ட திகதி
III. வருடாந்த வட்டி வீதம்
IV. கடன் தொகையினை மீளச் செலுத்துவதற்கு கோருகின்ற காலமும் குழுவினால் வழங்கப்படுகின்ற காலமும்
V. விசாரணைக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மாணம்.

6.3 இக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானம் வங்கி முகாமையாளரினால் ஒவ்வொரு கடனாளியின் பொருட்டும் தனித்தனியாக எழுத்து மூலம் பேணப்படல் வேண்டும். இதற்கான ஒரு கோவையினை அல்லது **CR** புத்தகத்தினை பாவித்துக் கொள்ள வேண்டும்.

6.4 ஒவ்வொரு கடனாளி தொடர்பாகவும் ஆராயும் போது ஏதும் வேறுபாடுகள் அல்லது முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டின் அது சம்பந்தமாக மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளருக்கு அறிக்கையிடல் வேண்டும்.

7. ஏனைய விடயங்கள்

7.1 மீள அறவிடப்படும் கடன்தொகை பெற்ற வருமானம் அறவிடமுடியாக் கடன் மீள் அறவீட்டுக் கணக்குப் பதிவுகளை மேற்கொள்வதுடன் ஏனைய கணக்குச் சீராக்கங்களையும் முன்னர் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும்.

7.2 இச் சலுகை திட்டத்தின் கீழ் அறவிட முடியாக் கடனாளியின் கடன் தொகையினை மீளச் செலுத்தி அவரை விடுவித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாதுவிடின் அவர் மீது எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டி ஏற்படும்.

7.3 இவ் ஆலோசனைகளின் பிரகாரம் கடன் தொகையினை செலுத்தி முடிக்கும் அங்கத்தவர்களினால் புதிய கடன் கோரிக்கைகள் முன்வைக்கப்படும் சந்தர்ப்பங்களில் ரூபா **50,000/=** க்கு குறைவான கடன் தொகையினை முதல் தடவையில் தற்போது நடைமுறையில் உள்ள பிணை அமைப்புக்கு ஏற்ப வழங்க முடியும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் வருமான மீட்டும் கருத்திட்டத்திற்கே கடன் வழங்க நடவடிக்கை எடுப்பது மிக முக்கியமாகும்.

7.4 இவ் ஆலோசனைகளுக்கு அமைவாக கடன் தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு வங்கி / வங்கிச் சங்க முகாமையாளர்கள் மற்றும் பணிக்குழுவினர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவ் விடயம் தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளாது இதற்கு மேலதிகமாக ஏதும் சலுகைகளை கோரி அனுப்பப்படும் கோரிக்கைகளுக்கு குறுநிதிப் பிரிவு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

7.5 **2018.06.15** ஆம் திகதியுடன் தற்போதைய **10%** வட்டியினை சீர் செய்து கடன் தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு வழங்கப்பட்ட காலம் முடிவடைவதுடன் அத்தினத்தில் இச் சலுகையினை வழங்கிய ஒவ்வொரு கடனினதும் முழுத் தொகையும் அறவிடப்பட்டிருத்தல் வேண்டும். அத்தினத்தில் இருந்துஏதும் மீதிகள் தொடர்ச்சியாக காணப்படுமாயின் ஆரம்பத்தில் செய்துகொண்ட கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள வட்டி வீதத்துக்கு அமைய வட்டி கணிப்பிடு செய்யப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

7.6 தற்போது அறவிட முடியாக் கடனாக அடையாளம் காணப்பட்டு ஒதுக்கம் செய்யப்பட்டுள்ள இக்கடன்களுக்கு கடன்காப்பீடு, கூட்டுக் காப்பீடு போன்றவற்றில் இருந்து எந்தவித இழப்பீடுகளையும் பெற உரிமை கிடையாது.

**நீல் ஹப்புஹின்ன**
**பணிப்பாளர் நாயகம்**

பிரதி :-

1. செயலாளர் - சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - தகவலுக்காக
2. மாவட்ட செயலாளர் - தகவலுக்காக
3. மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர் - தகவலுக்காக
4. சகல பிரதேச செயலாளர்களுக்கும் - தகவலுக்காக
5. பிரதம உள்ளக கணக்காய்வாளர், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் - உரிய நடவடிக்கைக்காக
6. சகல வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும் - உரிய நடவடிக்கைக்காக

**Translated By: I.Aliyar**